# Da vinci Code

இது "தி டாவின்சி கோடு" (The Da Vinci Code) என்கிற ஆங்கிலப்படத்தைப்பற்றிய கருத்தாகும். இது உங்கள் ஆத்துமாவுக்கு பிரயோசனமற்றதாக இருக்குமாயின் கீழுள்ள பகுதியை நீங்கள் வாசிக்க வேண்டாம் என்பதே என்னுடைய கருத்து.

---

## இயேசு கிறிஸ்துப் பற்றிய தவறான சினிமா

இயேசு கிறிஸ்துவின் மகிமையை கெடுக்க, அவர் தெய்வம் என்ற மேன்மையை கெடுக்க ஆதி முதலே பிசாசு முயற்சி செய்தததை சுவிசேஷ நூல்களில் நாம் காண்கிறோம்.

இப்போதும் அதே முயற்சிகளை நடத்திக்கொண்டிருக்கின்றான் பிசாசு. இப்போது வெளியிட்டிருக்கும் (The Da Vinci Code) என்ற சினிமா படத்தைப்போல் இதற்கு முன்பும் Last Temptaion of Jesus Christ என்ற படமும், Jesus Christ Supper Star என்ற பெயரில் நவீன இசைகளின் மூலம் அவரை நவீன நாகரீக மனிதனாக சித்தரித்தும் அந்த சினிமாவை வெளியிட்டார்கள்.

இப்போது புதிதாக வந்துள்ள சினிமா மகதலேனா மரியாளை இயேசு கிறிஸ்து திருமணம் செய்து கொள்வதைப் போலவும் அவர்களுக்கு பிள்ளைகள் பிறந்ததைப் போலவும் சித்தரித்து இசேுவை உலகப் பிரகாரமான சாதாரண மனிதனாக காண்பிக்க முயன்றிருக்கின்றார்கள்.

இதற்கு பின்னால் பெரும் பணக்காரர்களான யூத இனத்தை சேர்ந்த குடும்பமும் அவர்களோடு இணைந்து வேறு சில யூதர்களும் இந்த ஏற்பாட்டை செய்துள்ளார்கள். இது இயேசுவை தெய்வமாகவும், பரிசுத்தராகவும் ஆராதிக்கும் மக்களை குழப்பமடைய பிசாசு இட்ட திட்டமாகும்.

இந்தியாவில் அதை தடைச்செய்ய நீதிமன்றத்தை அணுகினார்கள். சென்சார் போர்டுடன் கிறிஸ்தவ சபை

தலைவர்களும் அமர்ந்து அந்த சினிமாவைப்பற்றி முடிவெடுத்து கோர்ட்டுக்கு அறிவிக்க நீதிமன்றம் கேட்டுக்கொண்டது. 18ம் திகதி மே மாதம் கிறிஸ்தவ சபை தலைவர்களே அந்த சினிமா வெளிவர அனுமதி கொடுத்துள்ளனர். ஆனால் அந்த சினிமாவின் ஆரம்பத்திலோ அல்லது முடிவிலோ இது கற்பனை கதை என்று எழுதி அந்த சினிமா வெளிவருமானால் எங்களுக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்றும் அறிவித்துள்ளார்கள். சினிமா முடிந்தவுடன் காட்டப்படும் கற்பனை கதை என்ற வார்த்தையை யார் கவனிக்கப்போகிறார்கள்?.

*இந்த சினிமாவைப்பற்றி விசுவாசிகள் கவலைப்படவேண்டாம். ஆபத்து சினிமாவில் இல்லை. கிறிஸ்தவ பெயரில் பொது மேடைகளில் ஜெபத்தில் பெயர்அழைக்கும் ஊழியர்கள், தீர்க்கதரிசனம் கூறும் ஊழியர்கள், அன்னிய பாஷை என்ற பெயரில் பரிசுத்தஆவியை விளையாட்டு நபராக சித்தரிக்கும் ஊழியக்காரர்களிடம்தான் நாம் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். ஆபத்து இந்த பொய் பேசும் ஊழியர்களிடம்தான் ஆரம்பமாகிறது.*